**IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI**

MCOP. No. 288/2017 c/w 287/2017

Deposition of PW2 solemnly affirmed under Provision Oaths Act 1969(Act 44 of 1969), the 31th day of March 2022.

| | | | |
|---|---|---|---|
| Name: | விஜயகுமார் | Religion: | |
| Father's Name: | கணேசன் | Caste: | |
| Village: | ஜலகண்டாபுரம் | Calling: | |
| Taluk: | மேட்டூர் | Age: | 27 |

**முதல் விசாரணை**

நான் இந்த MCOP.No.288/2017 என்ற மனுவில் மனுதாரர் மற்றும் ம.சா.2 ஆவேன். எனது தரப்பு முதன்மை சாட்சிக்காக பிரமாண நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் அதிலுள்ள சங்கதிகள் நான் கூறியவை தான். அதில் நான் படித்து பார்த்து தான் கையொப்பமிட்டுள்ளேன். அதை எனது தரப்பு முதன்மை சாட்சியாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 3 ஆவணங்களை ம.சா.ஆ-11 முதல் 13 ஆக குறியீடு செய்ய தாக்கல் செய்துள்ளேன். காயச்சான்றிதழ் உண்மை நகல் ம.சா.ஆ-11, மருத்துவமனை வெளியேற்ற குறிப்பு அசல் ம.சா.ஆ-12. மருத்துவ பில்கள் அசல் ம.சா.ஆ-13 ஆகவும் மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்படுகின்றன. எனவே, மனுப்படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :**

விபத்து சமயத்தில் நான் தான் வாகனத்தை ஓட்டி சென்றேன். எனக்கு ஓட்டுநர் உரிமம் விபத்து சமயத்தில் இல்லை என்றால் சரியல்ல. அது தொலைந்துவிட்டது. அதன் பின்னர் நான் ஓட்டுநர் உரிமம் எடுக்கவில்லை என்றால் சரிதான். தெலைந்துபோனதற்கு நகல் எடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் தலைக்கவசம் அணிந்திருந்தேன். நான் ஓட்டி சென்ற வாகனத்தின் உரிமையாளர் நான் தான். விபத்து எப்போது நடைபெற்றது என்றால், 26.10.2017. ம.சா.ஆ-11 மற்றும் 12 ஆவணங்களில் 25.10.2017 அன்று நான் மருத்துவமனையில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதில் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. ம.சா.ஆ-11 மற்றும் 12 ஆவணங்களில் உள்ளபடி 25.10.2017 அன்று தான் விபத்து நடைபெற்றது என்றும், முதல் தகவல் அறிக்கையில் அந்த விவரங்கள் இல்லாததால் 2ம் எதிர்மனுதார் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைபட்டவர் அல்ல என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 26.10.2017 அன்று நான் கொடுத்துள்ள மருத்துவ ஆவணங்களின் படி நான் மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்துள்ளதால் எனக்கு விபத்து ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் தலைக்கவசம் அணிந்திருந்தேன்.

Sd/-Vijayakumar,

Sd/-S.Uma Maheswari,
Sub Judge, Sankari.